# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 5/2018

பெயர்: சின்னராஜ் நாள் : 13.07.2022

வா.சா.1 – 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – சின்னராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

இந்த வழக்கை சொத்தில் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கான சங்கதிகளை நான்தான் வழக்கறிஞரிடம் கூறினேன். 1 ம் பிரதிவாதி கந்தாயி எனது அத்தை ஆவார். எனது வீட்டிலிருந்து சுமார் 2 கி.மீ. தூரத்தில் 1 ம் பிரதிவாதி குடியிருந்து வருகிறார். 2 முதல் 7 பிரதிவாதிகள் 1 ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் பிள்ளைகள் ஆவார்கள். வழக்குரையில் 1 ம் பிரதிவாதி எனது அத்தை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. எனது தகப்பனார் பெயர் கோனேரி, தாயார் பெயர் கமலா ஆகும். நானும் எனது பெற்றோர்களும் தனித்தனியாகத்தான் குடியிருந்து வருகிறோம். சுமார் 15 வருட காலமாக தனியாக குடியிருந்து வருகிறோம். எனக்கு 34 வயது ஆகிறது. நான் பெற்றோரை பிரிந்து 15 வருட காலமாக தனியாக குடியிருந்து வருகிறேன் என்று எனது சாட்சியத்திலும், வழக்குரையிலும் கூறவில்லை. எனது பெற்றோர்கள் குடியிருக்கும் வீட்டின் கதவிலக்க எண் தெரியாது. நான் கதவிலக்கம் 58 ல் குடியிருந்து வருகிறேன். நான் தனியாக இருந்து வருவதற்கு குடும்ப அட்டையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்யவில்லை. நான் எனது பெற்றோர்களும் ஒரே வீட்டில்தான் கூட்டுக் குடும்பமாக இருந்து வருகிறோம் என்றாலும், நான் வழக்கிற்காக தனித்தனியாக குடித்தனம் இருந்து வருகிறோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சரியல்ல. 1 ம் பிரதிவாதியுடன் எனது குடும்பத்திற்கு பேச்சுவார்த்தை இல்லை. எனது பெற்றோர்களுடனாவது பேச்சுவார்த்தை உள்ளதா என்று எனக்கு தெரியாது. ஏன் பேச்சுவார்த்தை இல்லையென்று எனக்கு எந்த விபரமும் இல்லை. 1 ம் பிரதிவாதி சொத்தில் இடைஞ்சல் செய்ததால் அவரிடம் எனக்கு பேச்சுவார்த்தை இல்லை. எப்போது இடைஞ்சல் செய்தார்கள் என்றால், சுமார் 10 வருடத்திற்கு முன்பு செய்தார்கள். 1 ம் பிரதிவாதி நான் ஓட்டி வரும் காட்டில் தனக்கும் பாகம் உள்ளது என்று இடைஞ்சல் செய்து வந்தார். சர்வே எண் 677/9, 686/1 ல் உள்ள காட்டில் பாகம் வேண்டும் என்று இடைஞ்சல் செய்தார். 1 ம் பிரதிவாதியிடம் ஆவணம் ஏதேனும் உள்ளதா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம் எந்த பதிலும் சொல்லவில்லை. 10 வருடத்திற்கு முன்பாகவே இடைஞ்சல் செய்த நிலையில், அப்போது வழக்கு தாக்கல் செய்யாததற்கு காரணம் ஏதேனும் உள்ளதா என்றால், தற்போதுதான் அதிகமாக பிரச்சனை

செய்தார்கள். நான் பிறந்ததில் இருந்தே தனியாகத்தான் உள்ளேன். எனது தகப்பனார் என்னுடன் தொடர்ந்த பிரச்சனை செய்து வந்தார், அதனால் எனக்கும் அவருக்கும் ஒத்துபோகவில்லை. வழக்கில் சொத்தில் எனக்கு எனது தாத்தா வழியில் கிடைக்கப்பெற்றது. எனது தாத்தாவிற்கு மூன்று ஆண்கள் மற்றும் மூன்று பெண்பிள்ளைகள் ஆகும். அந்த மூன்று பெண்களின் பெயர் 1) பெருமாயி, 2) மாரியம்மாள், 3) கந்தாயி ஆகும். அதில் பெருமாயி காடையாம்பட்டியில் வாழ்ந்து வந்தார், அவர் தற்போது இறந்துவிட்டார். மாரியம்மாள் எங்கு உள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியாது. தற்போது இறந்துவிட்டதாக சொன்னார்கள். கந்தாயி நல்லணம்பட்டியில் குடியிருந்து வருகிறார். பெருமாள், பெரியண்ணன், கோனேரி ஆகியோர்கள் எனது தாத்தாவின் மூன்று மகன்கள் ஆவார்கள். அதில் கோனேரி என்பவர் எனது தகப்பனார் ஆவார். பெருமாள், பெரியண்ணனை பார்த்துள்ளீர்களா என்றால், சிறு வயதில் பார்த்துள்ளேன். பெரியண்ணன் 2017 ம் ஆண்டு எனது வீட்டில் இறந்துவிட்டார். பெரியண்ணனுக்கு ஒரு மகள் உள்ளார், அவருடைய பெயர் எனக்கு தெரியாது. பெருமாள் என்பவர் 1992 ல் இறந்துவிட்டார். அவர் எங்கள் வீட்டில்தான் இறந்துவிட்டார். எனது தாத்தா கிரையம் பெற்றதாக சொல்லப்படும் நிலத்தின் பட்டா ஆவணத்தை நான் பார்த்ததில்லை. எனது தாத்தா சொத்து சம்பந்தமாக வழக்கு ஏதேனும் நடந்ததா என்ற விபரம் எனக்கு தெரியாது. எனது தகப்பனாருடன் கடந்த 20, 30 வருடங்களாக பேச்சுவார்த்தை இல்லை. அவர் எனது தாத்தாவின் சொத்துக்களை பொறுத்து ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் ஒரு உயில் ஆவணம் ஆகும். அந்த வழக்கை எனது தகப்பனார் கோனேரி தாக்கல் செய்தார். வா.சா.ஆ.2 ஆவணம் குறித்து எனக்கு பெரியண்ணன் கூறிதான் விபரம் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்திற்கான முத்திரைத்தாளானது கோனேரி, இடங்கணசாலை என்று எனது தகப்பனார் பெயரில் வாங்கப்பட்டதாகத்தான் உள்ளது. நான் இந்த வழக்கை எனது பெற்றோர் மற்றும் சகோதர, சகோதரிகளுடன் சேர்ந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும், இந்த வழக்கிற்காக அவர்களுடன் எந்த பேச்சுவார்த்தையும் இல்லையென்று கூறி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. பிரதிவாதிகள் தரப்பில் நான் சார்பு நீதிமன்றம், சங்ககிரியில் தாக்கல் செய்த அசல் வழக்கு எண் 3/2017 வழக்குரையில் கேட்டு ஒரு குறிப்பாணை தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியும். அந்த வழக்குரையை நான் இந்த நீதிமன்றத்தில் ஒரு ஆவணமாக தாக்கல் செய்யவில்லையென்றால், சரிதான். அந்த வழக்கில் எனது தரப்பு வழக்கறிஞர் திரு. சந்திரசேகர் ஆவார். அதே வழக்கறிஞர்தான் இந்த நீதிமன்றத்தில் எனது தரப்பில் ஆஜராகிறார். அந்த வழக்குரையை தாக்கல் செய்யாததற்கான காரணம் என்ன என்றால்,

எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் அசல் வழக்கு எண் 3/2017 க்கான வழக்குரையின் சான்றிட்ட நகல் என்றால், சரிதான். **அந்த ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த வழக்கை தாக்கல் செய்வதற்கான சங்கதிகளை நான்தான் கூறினேன். அந்த வழக்கிலும் என்னுடைய பெற்றோர்களிடம் இருந்த சிறுவயதில் இருந்து பிரிந்த வாழ்வதாக குறிப்பிடவில்லை என்றால், சரிதான். அந்த வழக்குரையில் நானும் எனது தகப்பனாரும் வழக்கு சொத்தை கூட்டாக உழவு செய்து வருவதாகத்தான் கூறியுள்ளேன். அந்த வழக்கில் வழக்கு சொத்திற்கான பட்டா ஆவணங்களை வா.சா.ஆ.3 முதல் 5 ஆவணங்களாக தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் வழக்கு சொத்திற்கான பட்டா ஆவணங்களை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால், நான் மேல்முறையீடு செய்துள்ளேன், அதனால் தாக்கல் செய்ய முடியவில்லை. அசல் வாக்கு எண் 3/2017 ல் பட்டா ஆவணத்தை பார்த்து தெரிந்து கொண்டுதான் தாக்கல் செய்தீர்களா என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. நான் கொடுத்த ஆவணங்களின் அடிப்படையில்தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அசல் வழக்கு எண் 3/2017 ஐ எனது தகப்பனார்தான் முன்னின்று தாக்கல் செய்து நடத்தினார் என்பதால்தான், அந்த வழக்கில் எந்தெந்த ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டது என்ற விபரம் கூடி தெரியவில்லை என்று சொன்னால், நான்தான் அந்த வழக்கை நடத்தினேன். என்னிடம் காட்டப்படும் ஆவணம் இடங்கணசாலை பிட்-2 பட்டா எண் 1136 வழக்கு 1ம் இன சொத்திற்கான பட்டா ஆவணம் என்றால், சரிதான். **அந்த பட்டா ஆவணம் அசல் பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** என்னிடம் காட்டப்படும் ஆவணம் இடங்கணசாலை பிட்-2 பட்டா எண் 1447 இவ்வழக்கு 2ம் இன சொத்திற்கானது என்றால், சரிதான். **அந்த பட்டா 1447 க்கான அசல் பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எனது தகப்பனார் பெயர் இல்லை என்று சொன்னால். சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணத்திலும் 1ம் பிரதிவாதியின் பெயர் உள்ளது என்றால், சரிதான். அசல் வழக்கு எண் 3/2017 வழக்கு தாக்கல் செய்யும்போதே வழக்கு சொத்திற்கு உண்டான பட்டா ஆவணத்தில் 1ம் பிரதிவாதியின் பெயர் இருந்தது என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதி வழக்கு சொத்தில் பங்கு இருப்பதாக 10 வருடங்களுக்கு முன்பாகவே சொன்ன நிலையில் அவர் பெயரில் வழக்கு சொத்தில் ஏதேனும் பட்டா அல்லது வில்லங்க சான்றிதழை பெற்று பரிசீலித்து பார்த்தீர்களா என்றால், பார்த்தேன் அவ்வாறு எதுவும் இல்லை. அவ்வாறு நான் பெற்றதாக கூறும் பட்டா, வில்லங்க சான்றிதழை இந்த வழக்கில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளீர்களா

என்றால், இல்லை.  அந்த ஆவணம் என் கைவசம்தான் உள்ளது.  அந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க வா.சா.1 ன் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

ஒப்பம் / சின்னராஜ்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.